# 9 ஆட்சி நிர்வாகத்தில் மக்களின் பங்கு பற்றல் பற்றித் தெரிந்துகொள்வோம்

இன்று நாடுகளை ஆட்சிசெய்வது தொடர்பில் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு ஆட்சிமுறைகள் நடைமுறையில் இருந்துவருகின்றன. அத்தகைய ஆட்சி முறைகளுள் சனநாயக ஆட்சிமுறை, பொதுவுடமை முறை, சர்வாதிகார ஆட்சி முறை மற்றும் மன்னராட்சி முறை என்பன அடங்குகின்றன. நவீன உலகில் அநேக நாடுகள் சனநாயக ஆட்சி முறையினையே செயற்படுத்தி வருகின்றன. இலங்கையிலும் சனநாயக ஆட்சி முறையே காணப்படுகிறது. சனநாயக ஆட்சி முறையினை அரசுகளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு மக்களின் தொடர்ச்சியான பங்குபற்றல் அவசியமானதாகும். எதிர்காலப் பிரஜை என்ற வகையில் இத்தகைய ஆட்சிமுறையைச் செயற்படுத்துவதற்கு உங்களுக்கும் சந்தர்ப்பம் கிட்டலாம். ஆகவே நீங்கள் இவ் அலகைக் கற்பதன் மூலம் சனநாயக ஆட்சி முறையினை விளங்கி, வெற்றிகரமாக அதனை முன்னெடுப்பதற்குரிய தேர்ச்சியினை விருத்தி செய்து கொள்ளலாம்.

## 9.1 சனநாயகம்

ஆரம்பகாலம் முதல் மனிதர் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளல், பாதுகாப்பை ஒழுங்குபடுத்திக் கொள்ளல் போன்ற கருமங்களை மேற்கொள்ளும் பொருட்டு இயல்பாகவே கூட்டுச்சேர்ந்து வாழ்வதற்குப் பழகியிருந்தனர். அன்று தமது வேலைகளில் ஒருவர் மற்றவர்களுடன் சமூகத் தொடர்பை ஏற்படுத்தி இருந்தனர். சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பழக்க வழக்கங்களுக்கு அமைய அச்சமூகங்களில் நிர்வாகம் நடைபெற்றிருக்கக் கூடும். நாகரிகங்களின் விருத்தி, சனத்தொகை அதிகரிப்பு, சமூகத் தேவைகள் சிக்கலாக மாறியமை போன்ற காரணிகளின் விளைவாக பிற்காலத்தில் நாடுகளில் சமூகங்களை நிருவகிப்பதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட ஆட்சி முறைகள் அவசியமாயின. இவ்வாறு தோன்றி வளர்ந்த ஆட்சிமுறைகள் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டி சமூக அபிவிருத்திக்குத் துணைபுரிவனவாக மாற்றமடைந்தன.

காலத்திற்குக் காலம் வாழ்ந்த அரசியல் சிந்தனையாளர்கள் மற்றும் அரசியல் அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட விளக்கங்களே பிற்காலத்தில் இவ்வாறான ஆட்சிமுறைகள் தோன்றிட பெருமளவு காரணமாகின. சனநாயகமும்

அவ்விதமாகத் தோன்றிச் செல்வாக்குப் பெற்ற ஓர் ஆட்சிமுறையாக விளங்குகிறது. அத்தகைய ஆட்சி முறையின் தோற்றம், வளர்ச்சி இடம்பெற்ற விதம் குறித்த விபரங்களை வரலாற்றுத் தகவல்களில் இருந்து நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

சனநாயகம் என்பது அடிப்படையில் மக்களின் விருப்பத்திற்கமைய நடைபெறக்கூடிய ஆட்சியைக் குறிக்கும். “சனநாயகம்” என்ற சொல்லில் “சன” என்பது மக்களையும் “நாயகம்” என்பது ஆட்சியையும் குறிப்பதாகப் பொருள்கொள்ளப்படுகிறது. இதன்படி சனநாயகம் என்பது மக்களாட்சியைக் குறிப்பிடுகின்றது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும்.

சனநாயகம் என்பது ஆங்கிலத்தில் “DEMOCRACY” (டிமோகிரஸி) என அழைக்கப்படுகிறது. இது கிரேக்க மொழிச் சொற்களான “DEMOS” (டிமோஸ்) மற்றும் “CRATOS” (கிராடஸ்) என்பதிலிருந்து தோன்றியதாகும். கிரேக்க மொழியில் “DEMOS” என்பது மக்களையும் “CRATOS” என்பது ஆட்சியையும் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

“DEMOCRACY” எனும் ஆங்கிலப் பதமானது தமிழில் “சனநாயகம்” என்பதாகப் பொருள்படுகின்றது. இதனை “மக்களாட்சி” அல்லது “குடியாட்சி” எனவும் அழைக்கலாம். இவற்றிலிருந்து சனநாயகம் என்பது மக்கள் தமது அதிகாரத்தைக் கொண்டு நடத்துகின்ற ஆட்சிமுறை என வரைவிலக்கணப்படுத்தலாம்.

பாடசாலை நூலகத்திலுள்ள ஆங்கிலம்-தமிழ் (ENGLISH -TAMIL) அகராதியில் DEMOCRACY என்பதற்குரிய தமிழ்க்கருத்தை நீங்கள் பரீட்சித்துப் பாருங்கள்.

அரசியல் சிந்தனையாளர்களும் அரசியல் அறிஞர்களும் சனநாயகம் என்பதற்குத் தெளிவான விளக்கங்களை முன்வைத்துள்ளனர். சனநாயக ஆட்சிமுறை தொடர்பாகக் கற்றறிய முயற்சிக்கும் உங்களுக்கு அவை பற்றிய வரைவிலக்கணங்களும் முக்கியமானவை.எனவே கீழே காணப்படுகின்ற வரைவிலக்கணங்கள் தொடர்பாக உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

**“மக்களை மக்களால் மக்களுக்காகச் செய்யும் ஆட்சிமுறை சனநாயகம் ஆகும்”**

**-ஆப்ரஹாம் இலிங்கன்-**

(கி.பி 1863 இல் கெட்ஸ்பேர்க் நகரில் ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நிகழ்த்திய உரையின் போது)

**“சனநாயகம் என்பது எல்லோருக்கும் உரிமைகள் கிடைக்கும் ஆட்சிமுறையாகும்” -சீலர்**

சனநாயக ஆட்சிமுறை தொடர்பாக நாம் விளங்கிக்கொள்ள முற்படும் போது சனநாயகமானது நேரடி மற்றும் மறைமுகம் என்னும் இரு இயல்புகளின் அடிப்படையில் செயற்படுத்த முடியும் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

## நேரடி சனநாயகம்

நேரடி சனநாயகத்தின் கீழ் அரசின் சகல பிரசைகளும் நேரடியாக ஆட்சி நடவடிக்கைகளில் தொடர்புபட்டவர்களாக விளங்குவர்.


உரு 9.1 கிரேக்கத்தின் எதேன்ஸ் நகர வாசிகள் ஒன்றுகூடி கலந்துரையாடலில் ஈடுபடல்.

உலகின் பழமைவாய்ந்த நாகரிகம் ஒன்றுக்குச் சொந்தமான கிரேக்கத்தின் எதேன்ஸ் மற்றும் ஸ்பாட்டா போன்ற நகர அரசுகளில் நேரடி சனநாயகம் காணப்பட்டுள்ளது. அங்கு ஆட்சி செய்வது தொடர்பில் பிரசைகளின் பங்குபற்றல் பெறப்பட்டுள்ளது. இத்தகைய நேரடி ஆட்சி கி.மு 5ஆம் நூற்றாண்டில் கிரேக்கத்தில் நிலவியது.

எதேன்ஸ் நகர அரசியல் ஆட்சிச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குரிய பிரசை அந்தஸ்து பெண்களுக்கும், அடிமைகளுக்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை. பிரசைகள் அனைவரும் ஓர் இடத்தில் ஒன்றுகூடி ஆட்சிக் கருமங்கள் தொடர்பான தீர்மானங்களுக்கு வந்தனர். கிரேக்கத்தில் நடைமுறையிலிருந்த மேற்படி ஆட்சிமுறை நேரடி ஜனநாயக ஆட்சிக்கு மிகச்சிறந்த உதாரணமாகும்.

இத்தகைய நேரடி ஆட்சிமுறையை தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.


9.2 இலங்கையின் பாராளுமன்றம்

- மக்கள் தொகை அதிகரித்தமை,
- அரசுகளின் நிலப்பரப்பு அளவு விரிவடைந்தமை
- சமூகத் தேவைகள் சிக்கல் நிறைந்ததாக மாறியுள்ளமை

போன்ற காரணங்களால் இன்று தேசிய மட்டத்திலும் சரி அல்லது பிரதேச மட்டங்களிலும் சரி நேரடி சனநாயக ஆட்சிமுறையை நடைமுறைப் படுத்துவது கடினமானதாகும்.எனினும் இன்று சனநாயக ஆட்சி மேற்கொள்ளப்படும் சில நாடுகளில் நேரடி சனநாயகத்தின் சில அம்சங்கள் பின்பற்றப்படுகின்றன. இதற்கு உதாரணமாக சர்வசன வாக்கெடுப்பு, மக்கள் தீர்ப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

### செயற்பாடு 9.1

கிரேக்கத்தின் எதேன்ஸ், ஸ்பாட்டா நகர அரசுகளில் செயற்பட்ட நேரடி சனநாயக ஆட்சிகுறித்து நீர் கற்றறிந்த தகவல்களைக் கொண்டு கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| நேரடி சனநாயக ஆட்சி முறையின் சாதகமான பண்புகள் | நேரடி சனநாயக ஆட்சி முறையின் பாதகமான பண்புகள் |
|---|---|
| | |

## பிரதிநிதித்துவ சனநாயகம் (மறைமுக சனநாயகம்)

நாட்டின் ஆட்சி அதிகாரம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளால் பிரயோகிக்கப்படும் ஆட்சி பிரதிநிதித்துவ சனநாயகம் அல்லது மறைமுக சனநாயகம் எனப்படும். நவீன சனநாயக அரசுகளில் மேற்படி பிரதிநிதித்துவ சனநாயக முறையே பின்பற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. வாக்காளர்கள் தேர்தல்கள் மூலம் தேர்தல் தொகுதிகள் சார்பாக தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பிரிதிநிதிகள் ஆட்சிப்பணியை மேற் கொள்வர். இதன்படி இத்தகைய ஆட்சி முறையில் மக்கள் ஆட்சி நடவடிக்கைகளில் மறைமுகமாகத் தொடர்புபடுகின்றனர்.



உரு 9.3 வாக்களிப்பு நிலையமொன்று

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள அரசியல் யாப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதி, மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மக்களின் வாக்குகளினாலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாகாண சபைகளின் பிரதிநிதிகளும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளும் மக்களின் வாக் குகளால், அவர்களின் பெரும்பான்மை விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்யப் படுகின்றனர்.

**ஆட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்குபற்றல்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்புச் சட்டத்தின் முதலாம் அத்தியாயத்தின் 3ஆம், 4ஆம் பிரிவுகளுக்கு ஏற்ப மக்கள் ஆட்சியில் பங்குபற்றுவது தொடர்பாகப் பின்வருமாறு எடுத்துரைக் கப்பட்டுள்ளது.

3ஆம் பிரிவு :- இலங்கைக் குடியரசில் இறைமை மக்களுக்குரியதாகும். இறைமை என்பது ஆட்சித் தத்துவங்கள், அடிப்படை உரிமைகள் , வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கும்.

4ஆம் பிரிவு :- மக்களின் இறைமை அதிகாரமானது பின்வரும் விதமாகப் பிரயோகிக்கப்படவும், அனுபவிக்கப்படவும் வேண்டும்.

(அ) மக்களது சட்டமாக்கற் தத்துவம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தினாலும், மக்கள் தீர்ப்பொன்றின்போது மக்களாலும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இலங்கையின் பாதுகாப்பு உள்ளிட்ட மக்களது ஆட்சித்துறைத் தத்துவம் மக்களால் தெரிவு செய்யப்படும் குடியரசு சனாதிபதியால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

மூலம் : 1978 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு யாப்பு - **1ஆம் அத்தியாயம்**

சனநாயக ஆட்சிமுறையினுள் தேர்தலில் மக்கள் வாக்களிப்பதன் மூலம் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றிக் கொள்ளும் அரசியல் கட்சிக்கு அல்லது குழுவுக்கு நாட்டை ஆளும் அதிகாரம் கிடைக்கிறது. அத்துடன் நாட்டை ஆட்சிபுரியத் தேவையான சட்டதிட்டங்கள் யாவும் பாராளுமன்ற மக்கள் பிரதிநிதிகளின் பெரும்பான்மை விருப்பத்திற்கு அமையவே நிறைவேற்றப் படுகின்றன.

**வரவு, செலவுத்திட்ட சட்டமூலம் 25 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நிறைவேறியது**

**நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் ஆளுங்கட்சி 2/3 பெரும்பான்மை ஆசனங்களுடன் அமோக வெற்றி**

பிரதிநிதித்துவ சனநாயக ஆட்சியில் ஆட்சியாளர்களைத் தெரிவு செய்தல்,

ஆட்சியை நடத்துவதற்குரிய சட்டங்களை ஆக்குதல் என்பவற்றின் வழிமுறைகளைப் பின்வரும் விடயங்களிலிருந்து தெளிவாக விளங்கலாம்.

* மக்களின் பெரும்பான்மை விருப்பத்திற்கு ஏற்பவே பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றமை.
* பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட கட்சி ஆளும் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்.
* பெரும்பான்மை மக்கள் பிரதிநிதிகளின் விருப்பத்திற்கு அமைய பாராளுமன்றத்தில் சட்ட மூலங்களை நிறைவேற்றல்.

பிரதிநிதித்துவ சனநாயக முறையிலும் மக்களுக்கு நேரடியாக ஆட்சியில் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, இலங்கை ஆகிய நாடுகளில் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் மக்கள் தீர்ப்புக்களை நடத்துவதற்கு சட்டபூர்வமான ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

சனநாயக ஆட்சிமுறை காணப்படக்கூடிய நாடுகளுக்கு சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.

* பெரிய பிரித்தானியா
* கனடா
* இந்தியா
* பிரான்ஸ்
* நியூசிலாந்து
* இலங்கை
* சிங்கப்பூர்
* ஜப்பான்

**பிரதிநிதித்துவ சனநாயகத்தின் அடிப்படை இயல்புகள்.**

* அரசியலமைப்புச் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப நாட்டின் ஆட்சி நிர்வாகம் நடைபெறல்.
* குறித்த தகைமையினை நிறைவுசெய்துள்ள சகல பிரஜைகளுக்கும் சர்வசன வாக்குரிமை காணப்படல்.
* தேர்தல் தொகுதிகளாக நாடு பிரிக்கப்பட்டிருத்தல்.
* ஆட்சி நிறுவனங்களுக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு சுதந்திரமாகவும் நீதியாகவும் தேர்தல் நடைபெறல்.
* நாட்டை ஆட்சிசெய்வதற்கான அரசாங்கம் மக்களின் வாக்குகள் மூலம் தெரிவுசெய்யப்படல்.
* கலந்துரையாடல் மூலம் ஆட்சி பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளல்.
* அரசியல் கட்சிகள் காணப்படல். ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இருத்தல்.
* அரசாங்கத்தின் அதிகாரங்கள் அதன் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுச் செயற்படுத்தப்படல்.
* நீதியை நிர்வாகம் செய்வதற்காக சுதந்திரமான நீதித்துறை முறை

காணப்படல்.



உரு 9.4 பொதுக்கூட்டமொன்றில் உரை நிகழ்த்துதல்

* சமூகத்திலுள்ள சகலருக்கும் சமமான உரிமைகள் கிடைக்கப்பெறலும், அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்குரிய வழிவகைகள் காணப்படலும்.
* சுதந்திரமாகச் செயற்படக்கூடிய ஊடகத்துறை காணப்படல்.
* சுதந்திரமான வகையில் செயல்படக்கூடிய செல்வாக்குள்ள குழுக்கள் (நலன்பேணும் குழுக்கள்) காணப்படுதல்.
* மக்கள் சுதந்திரமான வகையில் கருத்துகளை வெளியிடுவதற்குரிய சந்தர்ப்பம் காணப்படல்.

சகல பிரசைகளுக்கும் சமத்துவமான உரிமைகள் வழங்கப்படல் சனநாயகத்தின் பிரதான இயல்பாக விளங்குகின்றது. அவ்வாறு அனுபவிப்பதற்கான ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய உரிமைகள் கீழே பட்டியலில் தரப்படுகின்றன.

**உரிமைகள்**

**சிவில் உரிமைகள்**

- வாழும் உரிமை
- தனியாள் சுதந்திரம்
- கருத்து வெளியிடும் உரிமை
- சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை
- விரும்பிய மதத்தைப் பின்பற்றும் உரிமை
- விரும்பிய இடத்தில் வாழும் உரிமை

**அரசியல் உரிமைகள்**

- ஆட்சியாளரைத் தெரிவு செய்யும் உரிமை
- அரசியல் கட்சியை ஆதரிக்கும் உரிமை
- தேர்தலில் போட்டியிடும் உரிமை
- தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும் உரிமை
- அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை
- அரசியல் பதவி வகிக்கும் உரிமை
- அரசுக்கு மனுச்செய்யும் உரிமை

**செயற்பாடு 9.2**


உமது ஆசிரியரின் உதவியுடன் சனநாயக ஆட்சியின் கீழ் பிரசை ஒருவருக்கு உரித்தான சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை உள்ளடக்கிய பட்டியலொன்றைத் தயாரியுங்கள்.

இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்புக்கு ஏற்ப மக்களுக்கு நேரடி சனநாயகப் பண்பு அடிப்படையிலும், பிரதிநிதித்துவ சனநாயகப் பண்பு அடிப்படையிலும் ஆட்சியில் பங்குபற்றுவதற்குக் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களைக் கீழ்த் தரப்பட்டுள்ள அட்டவணையில் பூர்த்தி செய்யுங்கள்.

| நேரடி சனநாயகத்தில் மக்கள் பங்கு பற்றும் சந்தர்ப்பங்கள் | பிரதிநிதித்துவ சனாநாயகத்தில் மக்கள் பங்குபற்றும்சந்தர்ப்பங்கள் |
|---|---|
| | |

## 9.3 சனநாயகம் வெற்றிபெறுவதற்கு அவசியமான காரணிகள்

அரசியல் சிந்தனையாளர்களும், அறிஞர்களும் சனநாயகம் பற்றி முன்வைத்துள்ள விளக்கங்களையும், சனநாயக ஆட்சியின் இயல்புகளையும் இதுவரை நீங்கள் விளங்கியிருப்பீர்கள். இப்போது சனநாயக ஆட்சிமுறை வெற்றியடைவது தொடர்பாக அவசியமான காரணிகள் பக்கம் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.



சனநாயக ஆட்சிமுறை வெற்றியடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை மேலே காட்டப்பட்டுள்ள உருவிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

## அரசியல் அறிவுபடைத்த மக்கள் இருத்தல்

அரசியல் பற்றிய அறிவுடைய புத்திசாதுரியம் நிறைந்த மக்கள் இருப்பது சனநாயக ஆட்சி வெற்றிபெறுவதற்கு அவசியமானதாகும்.

தேர்தலின்போது அரசியல்கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்களை நன்றாக ஆராய்ந்து பார்த்து தமது வாக்கினைப் பயன்படுத்துவதனால் நாட்டிற்குப் பொருத்தமான ஆட்சியாளர்களைத் தெரிவுசெய்யும் வாய்ப்பு வாக்காளருக்குக் கிடைக்கிறது. அத்துடன் அதிகாரத்திற்கு வந்தபின்பு ஆளும் கட்சியினால் செயற்படுத்தப்படும் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து அவதானத்துடன் இருப்பது மக்களின் கடமையாகும். இதற்காக மக்கள் சிறந்த அரசியல் அறிவுடையோராக இருக்க வேண்டியுள்ளது.

அதேபோன்று அரசியல் அறிவு படைத்த புத்திசாதுரியமான மக்களைக் கொண்ட சமூகத்தின் அங்கத்தவர்கள் தமது உரிமைகளை அனுபவிப்பதோடு பிறரது உரிமைகளுக்கு மதிப்பளிப்பவர்களாகவும் விளங்குவர். இதன் காரணமாக சமூக முரண்பாடுகள் மற்றும் வன்முறைகளை ஒழிப்பதற்கும், குற்றச் செயல்கள் துஷ்பிரயோகங்களற்ற சமூகமொன்றை உருவாக்குவதற்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

## அர்ப்பணிப்புடன் செயலாற்றக்கூடிய தலைமைத்துவம் இருத்தல்

கடந்த ஆண்டில் வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் பாடத்தைக் கற்றபோது, தலைமைத்துவம், தலைமைத்துவப் பண்புகள், தலைமைத்துவப் பண்புகளை எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம் என்பன பற்றிய அனுபவத்தைப் பெற்றிருப்பீர்கள்.

சனநாயக ஆட்சியில் பிரதேச மட்டம் தொடக்கம் தேசியமட்டம்வரை ஆட்சி நிர்வாகத்தை நடாத்துவதற்காக பிரதிநிதிகள் மக்களின் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். அவ்வாறு தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் மற்றும் தலைவர்களின் முக்கியபணி தேசிய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு ஆட்சியை மேற்கொள்வதாகும். தலைவர்கள் நேர்மையாகவும், அர்ப்பணிப்புடனும் பொறுப்பு வாய்ந்த விதத்திலும் செயற்படுவதே மக்களின் எதிர்பார்ப்பாகும். அத்துடன் தலைவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவதானது மக்களின் நம்பிக்கையை வெல்வதற்கும், தேசிய அபிவிருத்திக்கும் காரணமாகலாம்.

**மக்களின் தலைவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய சில கடமைகள்**

- நேர்மையாகச் செயற்படுதல்
- அர்ப்பணிப்புடன் செயலாற்றுதல்
- பிறரது கருத்துகளுக்கு மதிப்பளித்தல்
- எதிர்க்கருத்துக்களை சகித்துக்கொள்ளல்
- நாட்டின் சுதந்திரம், உரிமைகள், சமத்துவம் என்பனவற்றைப் பாதுகாக்க உழைத்தல்
- சகல பிரசைகளையும் சமத்துவமாக நடத்துதல்.
- ஒத்துழைப்புடன் கருமமாற்றுதல்
- தேசிய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு செயற்படல்

## பலம் வாய்ந்த இருகட்சி முறை காணப்படல்

சனநாயக ஆட்சிமுறையை செயற்படுத்துவதற்கு அரசியல் கட்சிகள் இருப்பது அவசியமாகும். அதிலும் வெற்றிகரமான சனநாயகம் நிலவுவதற்கு பலம்மிக்க இருகட்சிமுறை அவசியமாகும். தற்போது சனநாயக ஆட்சிமுறை மேற்கொள்ளப்படும் நாடுகளில் இருகட்சிமுறை மற்றும் பலகட்சிமுறை ஆகியன நடைமுறையிலுள்ளன.

இருகட்சிமுறை செயற்படும் போது தேர்தலில் பிரதான ஆளும் கட்சி ஒன்றும் பிரதான எதிர்க்கட்சி ஒன்றும் உருவாகும் வாய்ப்புள்ளது. பலமான ஆளும் கட்சி அமைவது ஆட்சி சிறப்பாக நடைபெறுவதற்குக் காரணமாகிறது. அதேபோன்று அரசியல்யாப்புச் சட்டத்தில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள குறித்த காலப்பகுதியினுள் அரசாங்கத்தின் கொள்கைகளை உரியவாறு நடைமுறைப் படுத்துவதற்கும் இது துணைபுரிகிறது.

பிரதான எதிர்க்கட்சி உருவாக்கப்பட்டிருப்பதன் மூலம் ஆளும்கட்சி செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டவும், ஆளும் கட்சிக்கு தமது பணிகளைச் செய்யமுடியாதபோது அதனை மாற்றியமைத்து அரசாங்கத்தைப் பொறுப்பேற்கவும் முடியுமாகிறது. அதேவேளை இரு கட்சி முறையின் கீழ் தேர்தலில் ஆட்சிபுரியும் கட்சியை மக்கள் உறுதியாகத் தீர்மானித்துக் கொள்ளவும் முடிகிறது.

இருகட்சி முறை காணப்படும் நாட்டில் அதிகாரத்துக்கு வரும் ஆளும் கட்சிக்கு தன் எண்ணப்படி செயற்படும் வாய்ப்பு இருத்தல், இரு கட்சிகளின்மீதும் விருப்பமற்ற வாக்காளர்களுக்கு தமது விருப்பங்களை வெளிக்காட்டுவதற்கான வாய்ப்பு இல்லாமை போன்ற குறைபாடுகளும் உள்ளன.

## சுதந்திரமான நீதித்துறைச் செயற்பாடு காணப்படல்

நாட்டை ஆட்சிசெய்வதற்கு சட்டதிட்டங்கள் அவசியமானவை. அது போன்று சகலருக்கும் பொதுவான சட்ட ஒழுங்கொன்று செயற்படல் சட்டத்திற்குக் கீழ்ப்படிவுள்ள சமூகமொன்று உருவாகுவதற்கு அடிப்படையாக அமையும். சட்டத்தின் கீழ்ப்படிதல், நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல் ஆகியன சனநாயக ஆட்சி வெற்றி பெறுவதற்கு முக்கிய காரணிகளாகும். சமூகப் பாதுகாப்பு, சமூக முன்னேற்றம் என்பன நீதிமன்றங்கள் சுதந்திரமாகச் செயற்படுவதிலும் மக்கள் சட்டத்திற்குக் கீழ்ப்படிவதிலுமே தங்கியுள்ளன.

## சுதந்திரமான ஊடகத்துறைச் செயற்பாடு காணப்படல்


சுதந்திரமான ஊடகத்துறை சனநாயக ஆட்சிமுறையின் வெற்றிக்குத் துணைபுரியும் மற்றுமொரு காரணியாகும். நாளாந்தம் செய்திகளை அறிந்து கொள்வதற்குரிய சந்தர்ப்பங்களை வழங்குவதுடன் திட்டங்களை வகுத்து இரசனை உணர்வுக்கும் ஆக்க நிர்மாணத்துக்கும் வாய்ப்பினை வழங்குதல், ஊடகங்கள் மூலம் நிறைவேற்ற வேண்டிய பணியாகும். பக்கச் சார்பின்றி உண்மையான செய்திகளை வழங்குவதனூடாக சரியான பொதுசன அபிப்பிராயத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஊடகத்துறைக்கு முடிகிறது.

பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியன எமது நாட்டில் காணப்படும் தொடர்புச் சாதனங்களுக்கு உதாரணங்களாகும்.

### சுதந்திரமான ஊடகத்துறையின் சில கடமைகளும் பொறுப்புக்களும்



- உண்மையானதும் சரியானதுமான தகவல்களை மக்களுக்கு வழங்குதல்
- பக்கச்சார்பின்றிச் செய்திகளை அறிவித்தல்
- திடீர் அனர்த்தங்கள் நிகழும்போது அவசியமான தகவல்களைத் தாமதமின்றி மக்களுக்குத் தெரிவித்தல்
- நாட்டின் கலாசாரம், தேசிய அடையாளங்கள் என்பவற்றுக்குப் பாதிப்பற்ற வகையில் செயற்படுதல்



## பொருளாதாரம் வளர்ச்சியடைந்த மட்டத்தில் காணப்படல்

நாட்டின் பொருளாதாரமட்டம் சிறப்பாக வளர்ச்சியடைந்திருத்தல் சனநாயக ஆட்சிமுறையின் வெற்றிக்கு உதவும் ஒரு காரணியாகும். மனித உரிமைகள், சமத்துவம், சமூகப் பாதுகாப்பு ஆகியன சமூகத்தில் சிறந்து விளங்குவதற்கு நாட்டின் பொருளாதாரம் உறுதியாக இருப்பது அவசியம். நாட்டின் பொருளாதார நிலை சிறந்து விளங்கும்போது மக்களின் பொருளாதார நிலையும் முன்னேற்றமடையும். எவருடைய வற்புறுத்தலுக்கும் அடிபணியாது, சுதந்திரமாகக் கருத்துக்களைக் கொண்டிருப்பதற்கும், சரியானவகையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் இதன்மூலம் மக்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

## சிறுபான்மையோர் அடக்கியாளப்படாது நடத்தப்படல்

பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கு அமைய சனநாயக ஆட்சிமுறை நடைபெறுகின்றபோதும், சிறுபான்மையினரின் கருத்துக்கள் எண்ணங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். இது சனநாயக ஆட்சிமுறையின் மிகச்சிறந்த இயல்பு ஆகும். பெரும்பான்மையினர் போன்று சிறுபான்மையினருக்கும் சமத்துவமான உரிமைகள் கிடைப்பதற்கு, சிறுபான்மையினரின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பது சனநாயக ஆட்சிமுறை வெற்றிபெறுவதற்கு அவசியமானதாகும்.

### செயற்பாடு 9.3

1. சனநாயக சமூகத்தின் பிரசை என்றவகையில் உங்களிடத்தில் வளர்ச்சியடைய வேண்டிய பண்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.
2. சனநாயக மக்கள் சமூகத்தின் செயற்பாட்டுக்கு உதவக்கூடிய பண்புகளை உங்களிடத்தில் வளர்த்துக் கொள்வதற்காகப் பாடசாலை மூலம் கிடைக்கப்பெறும் வாய்ப்புக்களைக் குறிப்பிடுங்கள்.
3. குடும்ப அலகு ஒன்றினுள் சனநாயக ரீதியாகச் செயற்படுவதற்குரிய சந்தர்ப்பங்களை நினைவு கூர்ந்து அவற்றைத் தொகுத்து அறிக்கைப் படுத்துங்கள்.

## 9.4 அரசியல் கட்சிகள்

இலங்கையில் அதிக எண்ணிக்கையான அரசியல் கட்சிகள் காணப்படுவதனை நீங்கள் அறிவீர்கள். தேர்தல்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் ஊடகங்களில் காண்பிக்கப்படும் விளம்பரங்கள், அறிவித்தல்கள், சுவரொட்டிகள், பத்திரிகைகள், தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் போன்றவற்றின் மூலம் நீங்கள் இதுபற்றிய அனுபவங்களைப் பெற்றிருக்கக் கூடும்.

நாட்டை ஆட்சிபுரிவதற்காக ஒழுங்கமைந்துள்ள நிரந்தரமான கொள் கைகளையும், குறிக்கோள்களையும் கொண்டு அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் தொழிற்படுகின்ற நபர்களின் குழுவை நாம் அரசியல் கட்சி எனலாம். அரசியல் கட்சி என்றால் என்ன என்பதை விளங்குவதற்கு அரசியல் அறிஞர்கள் மற்றும் அரசியல் சிந்தனையாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களை ஆராய்ந்து பார்ப்போம்.

**"அரசியல் கட்சி என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட அரசியல் சமூகங்களில் அரசியல் அதிகாரத்தைப் பெறுதல், அவ்வதிகாரத்தை செயற்படுத் துவதற்குரிய குறிக்கோள்களைக் கொண்டதுமான ஒன்றுசேர்ந்துள்ள நபர்களின் குழுவாகும்."**

**-மொறிஸ் டுவேஜர் -**

**"அரசியல் கட்சி என்பது பொதுக்கொள்கைகளின் கீழ் தேசப் பற்றுடையோருக்குச் சேவை செய்யும்பொருட்டு ஒன்றிணைந்துள்ள நபர்களின் குழுவாகும்"** **- எட்மன்ட் பேர்க்-**

இதன்படி அரசியல் கட்சி என்பது அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதனை நோக்காகக் கொண்டு ஒழுங்கமைந்த ஒத்த அரசியல் கருத்துக் களையுடைய பிரசைகள் குழுவாக ஒன்றுபட்டு இயங்குவதாகும் என அறிந்து கொள்ளலாம்.

### அரசியல் கட்சிமுறை

இன்று உலகின் பல்வேறு நாடுகளிலும் செயற்படுகின்ற கட்சிகளின் எண்ணிக்கை, அரசாங்கத்தை அமைப்பதில் பங்கு கொள்ளும் கட்சிகளின் எண்ணிக்கை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சி முறை மூன்று வகைகளில் பிரித்து நோக்கப்படுகின்றது.

**ஒருகட்சிமுறை** :- அரசாங்க அதிகாரத்தை வழக்கமாக ஓர் அரசியல் கட்சி மாத்திரம் கொண்டிருத்தல்.

**இருகட்சி முறை** :- நாட்டில் பல அரசியல் கட்சிகள் இருந்தாலும் இரு பிரதான கட்சிகள் மாறிமாறி அரசாங்க அதிகாரத்தைக் கொண்டிருத்தல்.

**பலகட்சி முறை** :- நாட்டில் பல எண்ணிக்கையான அரசியல் கட்சிகள் காணப்படுகின்ற போதும், அரசாங்க அதிகாரத்தை இரண்டுக்கு மேற்பட்ட கட்சிகள் மாறிமாறிக் கொண்டிருத்தல்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள கட்சிமுறைகள் நடைமுறையிலுள்ள நாடுகள் சிலவற்றின் விபரங்களைக் கீழ்வரும் அட்டவணைமூலம் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

| கட்சி முறை | காணப்படும் நாடுகள் |
|---|---|
| ஒரு கட்சி முறை | சீனா, கியூபா, வடகொரியா, வியட்னாம் |
| இரு கட்சி முறை | பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்க நாடுகள் |
| பலகட்சி முறை | பிரான்ஸ், இந்தியா,இலங்கை |

பிரதிநிதித்துவ சனநாயகத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசியல் கட்சிகள் மிக முக்கியமான பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றன. கட்சி முறையின்றி பிரதிநிதித்துவ சனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வேறு வழிவகைகள் எதுவும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

## சமூக ஐக்கியத்தை ஏற்படுத்துவது தொடர்பில் அரசியல் கட்சிகளின் பணிகள்

சனநாயக ஆட்சிமுறை நடைபெறும் பெரும்பாலான நாடுகளில் இருகட்சி முறை அல்லது பலகட்சி முறையே பின்பற்றப்படுகிறது. இது சமூக ஐக்கியம், சமூக முன்னேற்றம் என்பவற்றுக்கும் சனநாயக மக்கள் சமூகத்தின் இயக்கத்திற்கும் காரணமாகிறது. இதன் காரணமாக அரசியல் கட்சி ஒன்று சமூக ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காகச் சிறப்பாகச் செயற்படுவதன் மூலம் சமூக முன்னேற்றம் ஏற்படுவதற்குத் துணையாக அமையலாம்.

நாட்டு மக்களின் அரசியல், சமூக பொருளாதார அபிலாசைகள் பலதரப்பட்டவை. பிரசை ஒருவருக்கு அரசியல் ரீதியாகத் தாம் விரும்பும் எந்தவொரு கருத்தினையும் கொண்டிருப்பதற்குச் சுதந்திரம் உண்டு. அதன்படி சமூகத்தில் வாழும் ஒவ்வொரு நபரும் தனித்தனியாகப் பல்வேறு அபிப்பிராயங்களையும், கருத்துக்களையும் கொண்டிருக்கலாம். அவ்வாறு பல்வேறு

கருத்துக்களைக் கொண்டிருப்போருக்கு மத்தியில் பொதுவான கருத்தினைக் கட்டியெழுப்பி மக்கள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்துகின்ற பிரதான ஊடகம் என்ற வகையில் அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன. பரந்து கிடக்கும் மக்களின் அபிப்பிராயங்களை ஒன்றுசேர்ப்பதற்கான பொதுவான கொள்கைத் திட்டத்தை சமூகத்தில் முன்வைத்து அதற்கு உடன்படுகின்ற மக்களைத் தமது கட்சியில் இணைத்துக் கொள்வதற்கு அரசியல் கட்சிகளுக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

**இதன்படி பரந்து கிடக்கும் மக்களின் கருத்துக்களை ஒன்றுசேர்ப்பதன் மூலம் சமூகத்தில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த அரசியல் கட்சியால் முடியும்.**

இவ்வாறான வழியில் ஒழுங்கமைகின்ற பல்வேறு கட்சிகளுக்குள்ளே பல்வேறு கருத்துக்களும் அபிப்பிராயங்களும் காணப்பட்டாலும் அக்கட்சிகளிடையே இடம்பெறும், பேச்சுவார்த்தைகள், கலந்துரையாடல்கள் என்பவற்றின் மூலம் தீர்மானங்களை எடுப்பதற்கும், கொள்கை உடன்பாட்டுக்கு வருவதற்கும், மக்கள் நலனையும் சமூக ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்கும் இயலுமாக அமையும்.

கொள்கைப் பிரகடனத்தைத் தயாரித்து அது தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிப்பதும் அரசியல் கட்சி ஒன்றின் பணியாகும். மேற்படி கொள்கைகளைத் தயாரிக்கும்போது மக்கள்தேவைகளையும், தேசியத் தேவைகளையும் அடையாளங் கண்டு அதற்கிணங்க கட்சிக் கொள்கை தயாரிக்கப்படுகிறது.பல்கலாசார, பல்லினமக்கள் சமூகத்தின் சகல மக்கள் தொகுதியினருக்கும் பொதுவான கொள்கைத் திட்டத்தைத் தயாரிப்பது அரசியற் கட்சியின் பொறுப்பாகும்.

இதன்படி அரசியல் கட்சியானது தனிநபரையும் சமூகத்தையும் இணைக்கும் வகையில் செயற்படுகின்றது. அதன்மூலம் சமூக ஒருங்கிணைப்பு வளர்ச்சியடைகின்றது. அரசியல் கட்சியின் மூலம் மேற்கொள்ளப்படும் மற்றுமொரு முக்கியபணி மக்கள் மத்தியில் அரசியல் அறிவையும் அனுபவங்களையும் வளர்த்தலாகும்.தேசியரீதியில் எதிர்நோக்கக்கூடிய அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக உரிய தீர்மானங்களை மேற்கொள்ளல், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக மிகவும் பொருத்தமான தீர்வு வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்தல் முதலிய விடயங்கள் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டுதல் அரசியல் கட்சியின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

தமது கட்சிக்கு அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்ளல், மற்றும் எதிர்காலத் தலைவர்களுக்குப் பயிற்சியளித்தல் ஆகியனவும் அரசியல் கட்சிகளால் மேற்கொள்ளப்படும் பணிகளாகும். தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கொள்கைகளை முன்வைத்து தமது கட்சிக்கு ஆதரவை வழங்கும் நபர்களை

அங்கத்தவர்களாக இணைத்துக் கொண்டு கட்சி அங்கத்துவத்தை அதிகரிக்கச் செய்வதும் அரசியல் கட்சியின் தொழிற்பாடாகும். அதே போன்று சமூகத்தின் சகல பகுதியினரையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தலைமைத்துவத்திற்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து பிரதேசத் தலைவர்கள் முதல் தேசியத் தலைவர்கள் வரை நபர்களைப் பயிற்றுவிப்பதற்கு அரசியல் கட்சிகளால் முடிகிறது. இது தேசிய அபிவிருத்தியும், ஒற்றுமையும் ஏற்படுவதற்குத் துணையாகலாம்.

## சனநாயக ஆட்சிமுறையில் எதிர்க்கட்சியின் பங்கு

சனநாயக ஆட்சிமுறையினுள் எதிர்க்கட்சியின் மூலம் மேற்கொள்ள வேண்டிய பணி முக்கியத்துவமானது. ஆளும் கட்சிமூலம் மேற்கொள்ளப்படும் சிறந்த செயற்பாடுகளை மதித்தல், அவற்றுக்குத் தமது ஒத்துழைப்பு வழங்குதல், ஆளுங் கட்சியால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் குறித்துக் கவனம் செலுத்துதல் மற்றும் அவற்றை முன்னேற்றுவதற்குப் பொருத்தமான விமர்சனங்களை முன்வைத்தல் ஆகியன எதிர்க்கட்சியினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதேபோன்று அரசாங்கம் தவறாகச் செயற்படும்போது அரசாங்கத்தை மாற்றி, ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துவதும் எதிர்க்கட்சியின் கடமையாகும். அதாவது தற்போதைய எதிர்க்கட்சி அடுத்த தேர்தலில் சிலவேளை ஆளுங்கட்சியாகவும் தெரிவு செய்யப்பட வாய்ப்பு இருப்பதனால் அது மிகவும் பொறுப்புடன் செயற்படுவது அவசியமானதாகும்.

**செயற்பாடு 9.4**

1. உமது ஆசிரியரின் ஒத்துழைப்பைப் பெற்று கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

| நாடு | செயற்படும் அரசியல் / அரசியல் கட்சிகள் |
|---|---|
| இலங்கை | |
| இந்தியா | |
| பிரித்தானியா | |
| சீனா | |

2. உமது ஆசிரியரின் வழிகாட்டலைப் பெற்று பின்வரும் தலைப்பில் விவாதம் ஒன்றை நிகழ்த்துங்கள்.

**“சனநாயக ஆட்சியின் வெற்றிக்கு மிகவும் பொருத்தமானது பலகட்சி முறையா? இரு கட்சிமுறையா?”**

## 9.5 ஆட்சியில் மக்கள் பங்குபற்றும் சந்தர்ப்பங்கள்

பிரதிநிதித்துவ சனநாயக ஆட்சிமுறை நடைபெறும் நாடொன்றின் பிரசைகள் என்ற வகையில் இலங்கையின் ஆட்சியில் மக்கள் பங்குபற்றுகின்றனர். அந்த வகையில் ஆட்சியில் மக்கள் பங்குபற்றும் பின்வரும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

- ஜனாதிபதித் தேர்தல்
- பாராளுமன்றப் பொதுத் தேர்தல்
- மாகாணசபைத் தேர்தல்
- உள்ளூராட்சிமன்றத் தேர்தல்
- மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு / பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு

### சர்வசன வாக்குரிமை

குறித்த வயது மட்டத்தை நிறைவு செய்யும் சகலருக்கும் இன,மத, பால் வேறுபாடுகளின்றி வாக்களிப்பதற்கு வழங்கப்படும் உரிமை சர்வசன வாக்குரிமை எனலாம். சர்வசன வாக்குரிமை சனநாயக ஆட்சிமுறையினுள் காணப்படக்கூடிய அடிப்படை இயல்பாகும். ஆட்சியாளர்களைத் தெரிவுசெய்யும் அதிகாரம் இதன் மூலம் வாக்காளர்களுக்குக் கிடைக்கின்றது.

இலங்கை பிரித்தானியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த போது கி.பி 1910 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட சட்டசபைக்கு சிறு பகுதியினரைத் தெரிவு செய்வதற்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. இதன் மூலம் கல்விகற்ற சொத்து வருமானமுள்ள ஆண்கள் மட்டும் வாக்குரிமையைப் பெற்றனர். இவ் வாக்குரிமை முறையால் மக்கள் தொகையில் சுமார் நான்கு சதவீதமானோர் மட்டுமே வாக்குரிமை உடையோராக விளங்கினர்.



9.5 வாக்களர் ஒருவர் வாக்களிக்கும் சந்தர்ப்பம்

1931 ஆம் ஆண்டு சகலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. 1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் 21 வயதுக்கு மேற்பட்ட சகல இலங்கையர் களுக்கும் இன,மத, பால், சொத்து, கல்வி வேறுபாடுகளைக் கருதாது சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டு வாக்குரிமை கிடைக்கும் வயதெல்லை 21 இலிருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டது.

**சர்வசன வாக்குரிமையின் முக்கியத்துவம் :-**

- சமத்துவத்தின் அடிப்படையில் வாக்குரிமை கிடைக்கப்பெறல் சர்வசன வாக்குரிமையின் மூலம் மக்களுக்குத் தமது ஆட்சியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தல்.
- தேர்தலின்போது வாக்குரிமையின் மூலமாகப் பொருத்தமற்ற ஆட்சியாளர்களை அல்லது பிரதிநிதிகளை மாற்றுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தல்.
- ஆட்சி நடவடிக்கைகளில் மக்களின் பங்குபற்றலை அதிகரித்தல்.
- மக்கள் மத்தியில் அரசியல் அறிவு அதிகரிக்கப்படுவதற்கான வாய்ப்புக் கிடைத்தல்.
- மக்களுக்கு ஆட்சிக்கருமங்களை நடைமுறைப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தல்.
- மக்கள் பிரதிநிதிகள் தம்மைத் தெரிவுசெய்யும் மக்களுக்குச் சேவை செய்வதற்காகச் செயற்படுதல்.

**செயற்பாடு 9.5**
உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடி சர்வசன வாக்குரிமையைப் பெறுவதற்குத் தகுதியற்றோரது பட்டியலொன்றைத் தயாரியுங்கள்.

## 9.6 தேர்தல்

அரசியல் செயற்பாட்டினுள் வாக்காளர் தமது விருப்பங்களை வெளிப்படுத்தவும் ஆட்சி செய்வதற்குப் பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குமான சந்தர்ப்பம் தேர்தல் எனலாம். நாட்டின் ஆட்சிக்காக மக்கள் அதிகம் பங்குபற்றும் சந்தர்ப்பமாகத் தேர்தல் காணப்படுகின்றது. சமகாலத்தில் சனநாயக ஆட்சிமுறை செயற்படும் நாடுகளில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்துகின்ற தேர்தல்களின் பிரதானமாக இரு பிரதிநிதித்துவ முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்விரு தேர்தல் முறைகளும் கீழே காணப்படுகின்றன.

1. எளிய பெரும்பான்மைப் பிரதிநிதித்துவமுறை
2. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை

### எளிய பெரும்பான்மைப் பிரதிநிதித்துவ முறை (தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறை)

பிரதேச அடிப்படையில் பிரிக்கப்படும் தேர்தல் தொகுதி (ஆசனம்) முறையில் எளிய பெரும்பான்மை முறைப்படி பிரதிநிதிகளின் தெரிவு மேற் கொள்ளப்படுகின்றது. மக்கள் தொகை, நிலப்பரப்பு என்பவற்றை அடிப்படையாகக்

கொண்டு தேர்தற் தொகுதிகள் பிரிக்கப்படுகின்றன. தேர்தலின்போது, தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களுள் கூடுதலான வாக்குகளைப் பெறும் வேட்பாளருக்கு வெற்றி கிடைக்கிறது. இத்தேர்தல் முறை இலங்கையில் 1978ஆம் ஆண்டிற்கு முன்னர் நடைமுறையில் இருந்தது. எளிய பெரும்பான்மை முறையின்கீழ் தேர்தல் தொகுதிகளில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் முறை குறித்த தெளிவைப் பெற்றுக் கொள்வதற்காக கீழே தரப்படும் உதாரணத்தை ஆராய்ந்து பாருங்கள்.

தேர்தல் தொகுதி :- X எனக் கருதுங்கள்.
போட்டியிட்ட வேட்பாளர்கள் :- மூவர் A , B , C ஆகும்.

ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை :-

| வேட்பாளர்கள் | பெற்றுக் கொண்ட வாக்குகள் |
|---|---|
| A | 21230 |
| B | 20225 |
| C | 10200 |

இதன்படி தேர்தல் தொகுதி X இல் A கட்சி வேட்பாளர் 21,230 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இவர் வேட்பாளர் B யிலும் பார்க்க 1005 வாக்குகள் மேலதிகமாகப் பெற்று பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## விகிதாசாரப் பிரதி நிதித்துவமுறை :-

விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை சனநாயக ஆட்சி முறையினுள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்குப் பின்பற்றப்படும் மற்றுமொரு பிரதிநிதித்துவ முறையாகும். இம்முறையே தற்போது இலங்கையிலும் பின்பற்றப்பட்டு வருகிறது. 1978ஆம் ஆண்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் மூலம் இம்முறை இலங்கையில் நடைமுறைக்கு வந்தது. அரசியலமைப்பின்படி எல்லை நிர்ணய ஆணைக்குழு இலங்கையை 20 இற்குக் குறையாததும் 25 இற்கு மேற்படாததுமான தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படல் வேண்டும் என வரையறை செய்தது. இதற்கிணங்கத் தற்போது 22 தேர்தல் மாவட்டங்களாக இலங்கை பிரிக்கப்பட்டுள்ளது. இதனை பின்வரும் தேசப்படத்தின் மூலம் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

தேர்தலின்போது ஒவ்வொருஅரசியல் கட்சியும், சுயேச்சைக்குழுவும் பெறுகின்ற மொத்த வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப குறித்த மாவட்டத்தில் தெரிவாக வேண்டியஆசனங்கள் பகிர்ந்தளிக்கப்படும். தேர்தல் மாவட்டங்களில் இருந்து பாராளுமன்றத்திற்கு 196 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். அத்துடன் ஒவ்வொரு அரசியல் கட்சி மற்றும் சுயேச்சைக்குழுவும் தேசிய ரீதியாகப் பெறுகின்ற மொத்த வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப தேசியப்பட்டியலிலிருந்து 29 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இதன்படி இலங்கைப் பாராளுமன்றத்துக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்படி தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 225 ஆகும்.




இலங்கையின் தேர்தல் தொகுதிகள்

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்கீழ் வாக்காளர் தமது வாக்குரிமையை உரியவகையில் பயன்படுத்துவதற்குக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய அம்சங்கள் குறித்து கவனத்தைச் செலுத்துங்கள்.

* முதலில் நாம் விரும்பும் அரசியல்கட்சி அல்லது சுயேச்சைக்குழுவுக்கு வாக்கினைச் செலுத்துதல்.
* அடுத்து நாம் தெரிவுசெய்த கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் சார்பில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளைச் செலுத்துதல்.

## விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் இயல்புகள்

* தேர்தல் மாவட்டம் ஒரு தேர்தல் தொகுதியாகக் கருதப்படுவதால் தேர்தல் தொகுதியின் பரப்பு விரிவடைந்து காணப்படல்
* வேட்பாளர்கள் கட்சி, சுயேச்சைகளின் சார்பில் குழுக்களாகப் போட்டியிடல்.
* தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் பெறுகின்ற மொத்த வாக்குகளின் விகிதாசாரத்திற்கு அமைய உறுப்பினர்களைப் பகிர்ந்தளித்தல்.
* சிறுகட்சிகளுக்கும் பிரதிநிதிகள் கிடைக்கும் வாய்ப்புக் காணப்படல்.
* வாக்காளருக்குத் தாம் விரும்புகின்ற கட்சியையும், வேட்பாளர்களையும் தெரிவு செய்து வாக்களிக்கும் சுதந்திரம் இருத்தல்.
* வேட்பாளர்களின் தனித்துவத்தை விட அவர்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சிகளே முக்கியம் பெறல்.

## ஜனாதிபதித் தேர்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பிற்கு அமைய ஜனாதிபதித் தேர்தல் ஆறு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு ஜனாதிபதித் தெரிவு இடம்பெறுகிறது. ஜனாதிபதித் தேர்தலில் முழு நாடும் தனித்தேர்தல் தொகுதி என்ற வகையில் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலின்போது செலுத்தப்படும் செல்லுபடியான வாக்குகளுள் அறுதிப்பெரும்பான்மை (அரைப்பங்கிலும் அதிகம்) வாக்குகளைப் பெறும் வேட்பாளர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுகின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பின்போது மூவர் வேட்பாளர்களாகப் போட்டியிட்டால், வாக்காளர் தமது வாக்குச் சீட்டில் 1ஆம், 2 ஆம் விருப்பத்தையும், மூன்றுக்கு மேற்பட்டோர் போட்டியிடும் பொது 1ஆம், 2ஆம், 3ஆம் விருப்பங்களையும் குறித்துக் காட்ட முடியும். தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் அரைவாசிக்கு மேல் வாக் குகளைப் பெறாதபோது கூடுதலான வாக்குகளைப் பெற்ற இரு வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு ஏனையோர்



இலவச பாடநூல் விநியோகத்திற்காக

போட்டியிலிருந்து நீக்கப்படுவர்.நீக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குச்சீட்டுக்களில் மேற்படி தெரிவுசெய்யப்பட்ட இருவருக்கும் அளிக்கப்பட்டுள்ள 2ஆம், 3ஆம் விருப்பத்தெரிவுகள் வாக்குகளாக எண்ணிக் கணக்கிடப்பட்டு அதன்பிறகு அதிகப் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுபவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்.

தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் வெற்றிபெறாத அதேநேரம் இருவர் அல்லது மூவர் சமமான எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றிருப்பாராயின் திருவுளச் சீட்டுக் குலுக்கப்பட்டு அவர்களுள் ஒருவருக்கு ஒரு வாக்கினைச் சேர்ப்பதனூடாக ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் தொடர்பான மக்களின் உரிமைகளும், கடமைகளும்

| தேர்தல் தொடர்பான மக்களின் உரிமைகள் | தேர்தல் தொடர்பான மக்களின் கடமைகள் |
|---|---|
| • வாக்களிக்கும் உரிமை<br>• அரசியல் கட்சியில் அங்கத்துவம் வகித்தல்<br>• அரசியல் கட்சி ஒன்றைத் தொடங்குதல்<br>• அமைதியான முறையில் ஒன்று கூடுதல்<br>• தேர்தல்களில் வேட்பாளராகப் போட்டியிடல்<br>• தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுதல்<br>• சுதந்திரமாகத் தமது கருத்துக்களை வெளியிடல்<br>• நடுநிலையுடன் அரசாங்கத்தை விமர்சித்தல் | • வாக்குரிமையை உரிய வகையில் பிரயோகித்தல்<br>• அமைதியாக தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடல்<br>• அமைதியான வகையில் கூட்டங்களை நடத்துதலும், கருத்தை வெளியிடலும்<br>• தேர்தல் சட்டதிட்டங்களை மதித்தல்<br>• புத்திசாதுரியமாகச் சிந்தித்து ஆட்சியாளர்களைத் தெரிவு செய்தல்<br>• பிறரது உரிமைக்கு மதிப்பளித்தல்<br>• நடுநிலமையுடன் விமர்சனங்களில் ஈடுபடல்<br>• வெற்றி தோல்விகளை நடுநிலையுடன் ஏற்றுக் கொள்ளல். |

**செயற்பாடு 9.6**

நீங்கள் ஒரு வாக்காளர் / ஒரு தேர்தல் வேட்பாளர் என்ற வகையில் சிந்தித்துச் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த பட்டியலொன்றைத் தயாரியுங்கள்.

| வாக்காளர் என்றவகையில் மேற் கொள்ள வேண்டியவை | தேர்தல் வேட்பாளர் என்ற வகையில் மேற்கொள்ள வேண்டியவை |
|---|---|
| | |

***சாராம்சம்***

* மக்கள் அதிகமாகவும் விருப்புடனும் பங்குபற்றுகின்றதுமான ஆட்சிமுறை சனநாயகம் என்பதாகப் பொருள்படும்.
* சனநாயகம் நேரடி, மற்றும் மறைமுக சனநாயகம் எனும் இரு வகைகளில் பின்பற்றப்படலாம்.
* சமகால உலகில் அநேக நாடுகளில் சனநாயக ஆட்சிமுறையே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
* பிரதிநிதித்துவ சனநாயகத்தின் கீழ் சர்வசன வாக்குரிமை, தேர்தல்கள் சுதந்திர நீதித்துறை, அரசியல் கட்சிகள் போன்றவற்றின் மூலம் மக்கள் கட்சியில் பங்குபற்றுகின்றனர்.
* அரசியலறிவுள்ள மக்கள் இருத்தல், அர்ப்பணிப்புள்ள சிறந்த தலைமைத்துவம், சுதந்திரமான நீதித்துறை, வளர்ச்சியடைந்த பொருளாதாரம் காணப்படல், சுதந்திர ஊடகத்துறை, சிறுபான்மையினர் அடக்கியாளப்படாமை ஆகியன சனநாயகம் வெற்றி பெறுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாகும்.
* சமூக அபிவிருத்தி மற்றும் சமூக ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு அரசியல் கட்சிகள் பல்வேறு பணிகளை ஆற்றுகின்றன.
* ஜனாதிபதித்தேர்தல், பொதுத்தேர்தல், மாகாணசபைத்தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு ஆகியன இலங்கையின் ஆட்சியில் மக்கள் பங்குபற்றுவதற்குள்ள முக்கிய சந்தர்ப்பங்களாகும்.
* தேர்தல் தொடர்பாக மக்கள் தமது உரிமைகளை அனுபவிப்பதோடு தமது கடமைகளையும் செய்வதன் மூலம் சனநாயக ஆட்சிமுறை வெற்றிகரமாகச் செயற்படுவதற்கு பங்களிப்புச் செய்யலாம். இது பிரசைகளின் கடமையாகும்.

**ஒப்படை**

உங்கள் ஆசிரியரின் வழிகாட்டலுடன் வகுப்பு மாணவர்களைக் கொண்டு சிறுவர் பாராளுமன்றம் ஒன்றை அமைத்து மாதத்துக் கொரு தடவை அப்பாராளுமன்றத்தின் கூட்ட அமர்வினை நடத்து வதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுங்கள்.